




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 21.03.2020


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- முக்கிய தினங்கள்










# தேசிய நிகழ்வுகள்

- **மத்திய ஆயுதக் காவல் படைகளின்** (Central Armed Police Forces – CAPF) **நேரடி ஆட்சேர்ப்புத் தேர்வுகளில் தேசிய மாணவர் படைச் சான்றிதழ்** (National Cadet Corps – NCC) **வைத்திருப்பவர்களுக்கு கூடுதல் மதிப்பெண்கள்** வழங்க **மத்திய அரசு முடிவு** செய்துள்ளது.
  - NCCல் இந்திய இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
  - **செய்தி துளிகள் :**
    - **தேசிய மாணவர் படை :** இது இராணுவம், கடற்படை மற்றும் விமானப் பிரிவுகளைச் சேர்ந்த இளம் மாணவர்களை உள்ளடக்கிய ஒரு முப்படைச் சேவை அமைப்பாகும்.
    - இந்த அமைப்பின் குறிக்கோள் **'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்'** என்பதாகும்.

- **மக்களவை இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டங்கள்** (திருத்த) **மசோதா 2020ஐ** புது தில்லியில் **மார்ச் 21-ஆம்** தேதி **நிறைவேற்றியது.**
  - 2014இன் இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டம் மற்றும் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (பொது – தனியார் கூட்டு) சட்டம், 2017 ஆகியவை இந்திய அரசின் தனித்துவமான முயற்சிகள்.

We Shine Academy™

- **செய்தி துளிகள் :**
    - இது நாடு எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத் துறையில் அறிவை வழங்குவதாகும்.

## சர்வதேச நிகழ்வுகள்

- ஐக்கிய நாடுகளால் வெளியிடப்படும் **உலக மகிழ்ச்சி அறிக்கை** (World Happiness Report) – 2020 இல் **இந்தியா 144-வது இடத்தில்** உள்ளது.
    - மொத்தம் 156 நாடுகள் இதில் உள்ளன. இதில் **மூன்றாவது முறையாக முதலிடத்தில் பின்லாந்து** உள்ளது. அதனை தொடர்ந்து டென்மார்க்கும, சுவிட்சர்லாந்து உள்ளது.
    - இதனை சர்வதேச மகிழ்ச்சி தினமான மார்ச் 20 அன்று ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி தீர்வுகள் அமைப்பு (United Nations Sustainable development Solutions Network) வெளியிட்டது.

- **சியரா லியோன் நாடு** முதன்முறையாக **ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றத்தில் இடம் பெற்றுள்ளது.**
    - **சியரா லியோனின் பொதுப் புள்ளிவிவர ஆணையரான ஒஸ்மான் சங்கோ** என்பவர் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவர ஆணைய அமர்வுகளின் அறிக்கைகளை வெளியிடும் உறுப்பினராக **4 ஆண்டு** காலத்திற்கு (2020 –

2023) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- **செய்தி துளிகள் :**
  - 2020ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் தேதியன்று நியூயார்க்கில் முடிவடைந்த 51வது அமர்வில், நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான (Sustainable Development Goals – SDG) உலகளாவிய குறிகாட்டிக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட முப்பத்தாறு மாற்றங்கள் ஐக்கிய நாடுகளின் புள்ளிவிவர ஆணையத்தால் (United Nations Statistical Commission – UNSC) ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள்

- **நிலவுக்கு மீண்டும் மனிதர்களை அனுப்பும் அமெரிக்க விண்வெளி ஆய்வு** நிறுவனமான நாசாவின் **திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.**
  - இது **கொரோனா வைரஸ் பரவல் காரணமாக** நியூ ஆர்லியன்ஸ் நகரிலுள்ள அந்த அமைப்பின் தொழிலகத்தில் ராக்கெட் கட்டுமானப் பணிகளும் ஸ்டென்னிஸ் ஸ்பேஸ் மையத்தில் நடைபெறும் பணிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வரும் 2024ஆம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் நாசாவின் திட்டம் தாமதமாவதற்கு வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச காடுகள் தினம்** ஐக்கிய நாடுகளால் **மார்ச் 21** அன்று அனுசரிக்கப்படுகின்றது.
    - இது 2012ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது. இந்நாள் நாடுகளின் முக்கியத்துவத்தையும் அதனை அதிகரிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவுகிறது.
    - **கருப்பொருள் : காடுகள் மற்றும் பல்லுயிர் பல்வகைத்தன்மை**
    - Theme : Forest & Biodiversity

## திருக்குறள்

**குறள் எண் : 144**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : பிறனில் விழையாமை

**எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**

**தேரான் பிறனில் புகல்.**

**விளக்கம்:** சிறிதளவும் தமது குற்றத்தை ஆராயாமல் பிறனுடைய வீட்டில் நுழைதல், எவ்வளவு பெருமை உடையவருக்கும் இழிவைத் தருவதன்றி வேறு எவ்வாறு முடியும்?

We Shine Academy TM